2017 ஜுன் 24] **[பேரவைத் தலைவர்]**

(குறுக்கீடு) சொல்வதைக் கேளுங்கள். திரு. தனியரசு நீங்கள் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரை அதுகுறித்துப் பேசுவதற்கு நான் அனுமதித்து, அவரும் பேசி நான் பதிவுசெய்துள்ளேன். உங்களுடைய அறிவிப்பும் இருக்கிறது. என்னுடைய ஆய்வில் இருக்கிறது. அதை நான் வாய்ப்பு வரும்போது எடுத்துக்கொள்கிறேன். உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சே. கருணாஸ். இதே பொருள் குறித்துதானா? (குறுக்கீடு) நீங்களும் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். என்னுடைய ஆய்வில் இருக்கிறது. பார்க்கலாம். உட்காருங்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) எல்லா நாட்களும் இப்படி எனக்குத் தொல்லை கொடுத்தால் (குறுக்கீடு) இல்லை, எதிர்க்கட்சித் தலைவரும், எதிர்க்கட்சித் துணைத் தலைவரும், எல்லா உறுப்பினர்களும் எழுந்து Zero hour-ல் வாய்ப்புக் கேட்டால் என்னால் எப்படி வாய்ப்புத் தரமுடியும்? (குறுக்கீடு) திரு. அன்பழகன், உங்களுடைய எதிர்க்கட்சித் தலைவரும், எதிர்க்கட்சித் துணைத் தலைவரும் சொல்வதால் இன்றைக்குப் பேச அனுமதிக்கிறேன். நான் தெளிவாகச் சொல்லிவிடுகிறேன். இனிமேல் இதுமாதிரி எழுந்து வாய்ப்புக் கேட்டால் என்னால் வாய்ப்புத் தர முடியாது.

(ஈ) சில துறைகள் தொடர்பான வினாக்கள் எடுத்துக் கொள்ளப்படாதது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. அன்பழகன், என்ன விஷயம் என்று சுருக்கமாகச் சொல்லுங்கள்.*

***திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தினசரி கேள்வி நேரத்தில் பல கேள்விகள் கேட்கப்பட்டு மாண்புமிகு அமைச்சர்கள் பதில் தந்துகொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, காவல் துறை, பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை போன்றவற்றில் இதுவரை கேள்விகள் வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதெல்லாம் ஒன்றும் இல்லை. நீங்கள் உட்காருங்கள். அதெல்லாம் தேவையானபோது நான் எடுத்துக்கொள்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. பிரின்ஸ் உங்கள் கட்சியில் முதல் வரிசையில் இருக்கிற திருமதி விஜயதரணிக்கு வாய்ப்புக் கொடுத்துவிட்டேன். உங்களுக்கு வாய்ப்பு இல்லை. உட்காருங்கள்.*